பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | கார்த்திகை 2 | முஹர்றம் 8 | இதழ் 278
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 17 - 11 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980 -11-
PERIODICALS DIVISION
LIBRARY

## ஆஸ்திரேலிய தூதுவரை வெளியேறக் கோரிக்கை

புதுடில்லி, நவ. 16

இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய தூதுவரை உடனடியாக இந்தியாவிலிருந்து விடுவிக்குமாறு ஆஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கபபட்டுள்ளது.

இந்தியாவில் இராணுவ ஆட்சி ஏற்படலாம் என்று இரகசிய கடிதம் ஒன்றை அனுப்பியதாக இத்தூதுவர் பற்றி செய்திகள் வெளிவந்திருந்தது தெரிந்ததே. (கு)

## ஆசிரியர் இல்லாததால் பாடசாலை மூடப்பட்டது

(புளியங்குளம்)

புளியங்குளம் கல்வி வட்டாரத்திலுள்ள நெச்சிக்குளம் 'படி2' அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லாததால் பாடசாலை மூடப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். பரஞ்சோதி சட்டக்கல்லூரியில அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து தமது ஆசிரியப் பதவியை ராஜினமா செய்திருந்தார். இவரது இடத்துக்கு அதன் பின்னர் கடந்த இரண்டு மாதங்களாக ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. பாடசாலையும் மூடப்பட்டுள்ளது. இதன் எதிரொலியாக இப்பகுதி மாணவர்களின் கல்வி நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோர் வவனியா மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி. திரு. எம். சிமியாம் பிள்ளையிடம் புகார் செய்துள்ளனர். (அ)

# பங்கீட்டு அடிப்படையில் பெற்றோல் விநியோகம்!

## ஜனவரி முதல் அமுலாகும்

(கொழும்பு)

**பங்கீட்டு முறையில் பெற்றோல் விநியோகத்தை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.**

**ஈரான்-ஈராக் யுத்தம் காரணமாக பெற்றோல் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது,**

தற்போது நாட்டுக்குத் தேவையான பெற்றோலில் 40 வீதத்தை ஈரான்- ஈராக் நாடுகள் வழங்கி வந்தது, அங்கு ஏற்பட்டுள்ள யுத்த நிலையைத் தொடர்ந்து அங்கிருந்து பெற்றோல் அனுப்பப்படாததால் பெற்றோல் விநியோகத்தில் மாற்றம் செய்யவேண்டி ஏற்பட்டுள்ளது. 60 வித பெற்றோலை வழங்கும் சவூதி அரேபியா மேலதிகமா பெற்றோலை வழங்க முடியாதிருப்பதாக தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தடுக்க இந்தோனேஷியாவிலிருந்து மசகு எண்ணையைத் தருவிப்பதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலே பங்கீட்டு முறையை கொண்டுவரவே அரசாங்கம் தீர்மானித்துள்ள போதிலும் பங்கீட்டு அட்டைகளை டிசம்பர் மாதத்திலேயே வழங்கு

(8-ம் பக்கம் பார்க்க)

## வெடிவிபத்து: 38பேர் மாண்டனர்!

(பாங்ஹாக்)

தாய்லாந்தின் தலைநகர் பாங்ஹாக்கிலுள்ள தாய்லாந்தின் பிரதான இராணுவ வெடிமருந்துக் களஞ்சியத்தில் நேற்றுக்காலை ஏற்பட்ட பெரும் வெடிவிபத்தில்; 38 பேர் மாண்டனர்! 300க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்!

வெடிமருந்துக் களஞ்சியத்தின் ஒருபகுதியில் திடீரென ஏற்பட்ட வெடிப்பு, பின்னர் ஏனைய களஞ்சியங்களுக்கும் பரவி, நகர் பூராவுமே ஒரே புகை மண்டலமாகக் காட்சி கொடுத்தது. இதன் விளைவாக ஐந்து மாடி ராணுவ முகாமொன்றும் முற்ருக சேதமானது. களஞ்சியங்களுக்குள் மேலும்பலர் கருகி மாண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது!

# பொலிஸார் என்று கூறி ரூ. 33,000 நகை கொள்ளை!

## நெடுங்கேணியில் பரபரப்பு!

(வவனியா)

நெடுங்கேணியைச் சேர்ந்த மருதோடை என்னுமிடத்தில் நள்ளிரவுநேரத்தில்வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் 33 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும், 1500ரூபா பெறுமதியான லைசென்ஸ் துவக்கையும், 5 தோட்டாக்களையும் கணவனையும் மனைவியையும் கத்திமுனையில் பயமுறுத்தி கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மருதோடையைச் சேர்ந்த சின்னத்தம்பி தவசிங்கம் என்பவரின் வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

6 பேர்கொண்ட கொள்ளைக் கோஷ்டியினர், சின்னத்தம்பி தவசிங்கம் என்பவரின் வீட்டிற்கு நள்ளிரவு சென்று வீட்டுக்காரரை எழுப்பி, கதவைத் திறப்பித்து தாங்கள் வவனியாப் பொலிஸிலிருந்து வருவதாகவும், வீட்டுக்குள் கள்ளத் துவக்கு வைத்திருப்பதாக அறிந்துகொண்டு வருவதாகவும் கூறி வீட்டினுள்ளிருந்து வெளியில் வந்தவரை இடித்து உள்ளே புகுந்தனராம். ஒருவர் வெளியில் நிற்க மற்றைய ஐவரும் உள்ளே சென்றனராம். பின்பு தவசிங்கத்தை கத்திமுனையில் படுக்கையில் குப்புற அமுக்கிப் பிடித்துக் கொண்டு ஒருவர் நிற்க இருவர் தவசிங்கம் மனைவி கங்காதேவியை கத்திமுனையில் பயமுறுத்திக்கொண்டிருந்தபோது அவர்களுடன் கங்காதேவி போராடி இரு கொள்ளையர்

(8ம் பக்கம் பார்க்க)

# ரயில் - வான் விபத்து: சாரதி துடிதுடித்து மரணம்!

## ரயில்வே கடவைக்கு பாதுகாப்பில்லாததே விபத்துக்குக் காரணம் என்கிருர் அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ். கோவில் வீதியிலுள்ள ரயில்வேக்கடவையில் இடம்பெற்ற ரயில் - வான் விபத்தில் மூன்று பெண்பிள்ளைகளின் தந்தையான வான் சாரதி ஒருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானூர்.

இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

இவ்விபத்தில் சிக்கி மரணமான கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தம்பிஐயாவின் (45 வயது) மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

- காலை 9 30 மணியளவில் வான் ரெம்பிள் ரோட் ரயில் கடவையை நோக்கி வந்து கொண்டிருந்தது. அவ்வேளை அனுராதபுரத்திலிருந்து அதிகாலை4.30மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த ரயிலும் மோதுண்டன.

ரயில்வே கடவையில் பாதுகாப்பாப்புக் கதவு இல்லாததால் ரயில் வருவதைக் காணுத வான் சாரதி கடவையைக் கடக்க முற்பட்ட போதே ரயிலும் வானும் மோதுண்டது. வான் சாரதி இரத்தவெள்ளத்தில் . சிக்கி ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். [illegible]

## "வெங்காயம், மிளகாய் இறக்குமதியை தடைசெய்க"

### இராமசாமிஜயர் நினைவுதினக் கூட்டத்தில் வலியுறுத்தப்படும்

(யாழ்ப்பாணம்)

"வெங்காயம், மிளகாய் முதலிய விளைபொருட்களுக்கு நியாயமான விலை வழங்கப்படுவதுடன் கட்டுப்பாடற்ற இறக்குமதியை அரசாங்கம் நிறுத்த வேண்டும்" என்ற கோரிக்கை நாளை மறுதினம் நடைபெறும் எஸ். இராமசாமி ஐயர் நினைவுதினப் பொதுக்கூட்டத்தில் வலியுறுத்தப்படும்.

புதன்கிழமை பிற்பகல் நல்லூர் கல்யாண மண்டபத்தில் திரு. பொன் குமாரசாமி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் 'அத்த' பத்திரிகை ஆசிரியர் திரு. எச். ஜி. எஸ். இரத்தினவீரா மற்றும் திருவாளர்கள் அ. வயித்திலிங்கம், எஸ்.விஜயானந்தன், எம். வி. சுப்பிரமணியம், டொமினிக்ஜீவா, க. நவரத்தினம், திருமதி வேதவல்லி கந்தையா ஆகியோரும் சிறப்புரையாற்றுவார்கள்.

இக் கூட்டத்தில் வலியுறுத்தப்படும் ஏனைய கோரிக்கைகள் வருமாறு:

"வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு மீண்டும் நிபந்தனையின்றி வேலை கொடுப்பதுடன் அவர்களின் கோரிக்கைகளை வழங்கவேண்டும். அத்தியாவசியசேவைச் சட்டம், பயங்கரவாததடுப்புச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை ரத்துச் செய்யவேண்டும். மக்களின் குடியியல் உரிமைகளைப் பறிக்கக்கூடாது. மாவட்ட அபிவிருத்திச்சபைகளைக் காட்டி மக்களை மோசம்பண்ணுமல் தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து பிரதேச சுயாட்சி முறையை வழங்கவேண்டும்"

## ஜி. ஸி. ஈ. உயர்தரம் விண்ணப்ப திகதி நீடிப்பு

(கொழும்பு)

இடைக்காலப் பாடத்திட்டத்திற்கு அமைய 1981-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ. உயர்தரப் பரீட்சையின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி 1981 ஜனவரி 15ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மினி பஸ் சிவிலியன் 75—76 மொடல் 26 ஆசனங்கள் உன்னத நிலையில் விற்பனைக்கு உண்டு. வாகனமாற்றம் செய்யவிரும்பின்செய்துகொள்ளலாம். மொடேன் பேணிச்சர், 79/2, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7364.
(7364)

விவசாயப் பெருமக்களுக்கு ஓர் நற்செய்தி. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சகலவகையான மரக்கறி விதைகளும் சில்லறையாக விற்பனை செய்யப்படுகின்றன. மிளகாய், கத்தரி, தக்காளி, கோவா, கறிமிளகாய் நாற்றுக்களும் விற்பனைக்குண்டு. பத்மா பாம், பலாலி ரோட், கோண்டாவில். 7373

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் மாம்பழம்சந்திக்கு அருகாமையில் வீடு கட்டுவதற்குரிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: தாமோதரம்பிள்ளை, இல.6, பாரதிவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 7372

## தேவை

35. M. M. கமரா விற்பனைக்கு இருந்தால் எம்மிடம் தொடர்புகொள்ளவும் போட்டோ இலங்கேஸ், 42, பலாலிவீதி, யாழ்ப்பாணம்.
7358

இ. சிவசுப்பிரமணியம்
சட்டத்தரணி &
நொத்தாரிஸ்,
திருநெல்வேலி, தெற்கு,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

மரண சாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம், இல: 46, பிறவுண் ரோட்டைச் சேர்ந்த செல்லையா ஐங்கரமூர்த்தியின் ஆதனங்களும், பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

ஐங்கரமூர்த்தி கைம்பெண் இராஜராஜேஸ்வரி,
இல: 46, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
— மனுதார்.

இல: தத்துவம்: 3554

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

1980-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ந் திகதி.

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

வரைவு:
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதார் சட்டத்தரணி.

7266

## லொறி விற்பனை
(24 ஸ்ரீ 9744)

## திகதி நீடிப்பு

''லொறி விற்பனை – 24 ஸ்ரீ 9744'' என

31–10–1980–ந் திகதி வீரகேசரி

தமிழ் பத்திரிகையிலும் தினமின சிங்கள பத்திரிகையிலும் வெளிவந்த விளம்பரத்தின்படி

லொறி விற்பனை நடைபெறமாட்டாது.

விற்பனை திகதி கீழ் குறிப்பிடப்படும் திகதிக்கு நீடிப்பு செய்யப்பட்டுள்ளது

நாவற்குழி பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ9744இலக்க'' இசூஸு'' லொறி விற்பதற்கான முத்திரையிடப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கு மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 2,000/-ம, மீளப் பெறமுடியாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 50/-ம் செலுத்த வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. தகுதி பெற்ற கேள்விக்காரர் கேள்விப்பத்திரம் திறக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்துக்குள் உரிய தொகை முழுவதையும் செலுத்துவதுடன் வாகனத்தையும் சங்க வளவிலிருந்து அப்புறப்படுத்தவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 25-11-1980 வரை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் ''தலைவர், நாவற்குழி பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், முருங்கன்'' என்ற விலாசத்திற்கு 29-11-1980-ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது மேல் மூலையில் ''லொறி விற்பனைக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும் வாகனத்தைப் பார்வையிடுவதற்கும் சங்க அலுவல் நேரத்தில் பொதுமுகாமையாருடன் தொடர்பு கொள்க.

ஒப்பம்
செ. மரியாம்பிள்ளை,
தலைவர்,
நாவற்குழி பகுதி
ப. நோ. கூ. சங்கம்,
முருங்கன்.
1980-11-13 (7363

## ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி

(புளியங்குளம்)

வவனியா மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் ஆறாம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த. சாதாரண வகுப்புவரை தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் பிரதம கல்வி அதிகாரி திரு. எம். சியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் திரு. இ முருகையா, வித்துவான் திரு. எஸ். குமாரசாமி, பண்டிதர் திரு. சு. க. சிவரத்தினம் ஆகியோர் பங்குபற்றிக் கருத்துரை வழங்கினார்கள். (அ)

மாநகர சபை,
யாழ்ப்பாணம்

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். வீதியில் மாநகராட்சி மன்ற பொதுசன நூலகத்திற்கு அருகாமையில் யுனைட்டெட் கிளப் வளவிற்குள் வீழ்ந்துள்ள வேம்பு மரம் ஒன்று 20-11-80-ந் திகதி முற்பகல் 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சித்தி பெற்ற கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரத்தையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-11-1980. 7366

## வகுப்புகள்

சென் பீற்றர்ஸ் மெதடிஸ்த சபை பின்வரும் வகுப்புக்களை 1981-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ட்றிமர் மண்டபத்தில் நடத்தும்.

1. பாலர்பாடசாலை 1-1-1981-ந் திகதியில் 3 வயதிற்கும் 5 வயதிற்கும் உட்பட்டவர்களுக்கு.
2. பெண்களுக்கு பாலர்பாடசாலை ஆசிரியப் பயிற்சி [ஆங்கிலம் 1 வருடம்]
3. பெண்களுக்கு பாலர் பாடசாலை ஆசிரியப் பயிற்சி [தமிழ் 1 வருடம்]
4. பெண்களுக்கு ஆங்கில மொழி [1 வருடம்] ஆங்கிலப் பேச்சு [6 மாதம்]

விண்ணப்பப் பத்திரங்கள் பின் வரும் முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். மார்கழி 15-ந் திகதி வரை விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

எல்லா வகுப்புகளும் 1981-ம் ஆண்டு தை மாதம் 19-ந் திகதி ஆரம்பமாகும்.

செல்வி எம். தம்பையா,
இல. 9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
7370

## இலவச விநியோகம்

(பச்சிலைப்பள்ளி)

மரம் நாட்டும் இயக்கத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அ. சி. குமாரசாமியும் வெற்றிலைக்கேணி நித்திய வெட்டை கட்டைக்காடு ஆகிய கிராமங்களுக்கு இப்பில் இப்பில், வேம்பு, மாமுந்திரிகை ஆகிய கன்றுகளைக் கொண்டு சென்று அங்குள்ள பொதுமக்களுக்கும் பாடசாலைகளுக்கும் விநியோகித்தார்கள்.

மரம் நாட்டும் இயக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக பச்சிலைப்பள்ளிப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு இதுவரை 1990 வேப்பங்கன்றுகளும் 5050 மாமுந்திரிகைக் கன்றுகளும் 1500 இப்பில் இப்பில் கன்றுகளும் மக்களுக்கு விநியோகிப்பதற்காக வந்து சேர்ந்துள்ளன.

மேலும் 3500 சவுசவுக் கன்றுகளும் 1000 மாங்கன்றுகளும் 5000 தென்னங்கன்றுகளும் வந்து சேரவுள்ளன.

## ''தருமபாலையம் என பெயரிடுக''

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தேர்தல்தொகுதியிலுள்ள கட்டுடை வீடமைப்புத் திட்டத்திற்கு 'தருமபாலையம்' என்று பெயர்சூட்டுமாறு அப்பகுதி மக்கள் வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் மூலமாகமேலிடத்தைக் கேட்டுள்ளனர். 1980-81-ம் ஆண்டிற்கான புதிய 30 வீடுகளும் இந்த வீடமைப்புத் திட்டத்திலேயே நிறுவப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்

### உடுவில் திருமதி புஷ்பராணி

உடுவிலைச் சேர்ந்த திருமதி புஷ்பராணி காலமானார். இவர் பரத்தின் அருமை மனைவியும், இரஞ்ஜினி (ஆசிரியை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி), கணேசன் (Central Engineering Consultancy Bureau Colombo), நடேசன் ஆகியோரின் அருமைத் தாயாரும், Haileys Ltd. குகமோகனின் மாமியாரும், செல்வராணி, சோதிராணி(உதவி வைத்தியர், ஏழுவூர்), சந்திரராணி (Ethopia), காலஞ்சென்ற இராஜசிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 17-ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 2 மணிக்கு உடுவிலில் நடைபெறும், உறவினர்களும் நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.
7374

# புதிய யமஹா -NEW YAMAHA



RD.125 ரூபா 16,500/-
RD.200 ரூபா 21,000/-
விலையில் 10% குறைக்கப்பட்டுள்ளது
RD.250 ரூபா 24,500 -
விலையில் 20% குறைக்கப்பட்டுள்ளது

பினன்ஸ் வசதிகள் 60% வரை உண்டு.

குறிப்பிட்ட தொகையே கைவசம் உண்டு; தேவைக்கு முந்துங்கள்.

TFC **த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்**

191, 249 C, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7680.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ★ ஈரான் - ஈராக் யுத்தம் மீண்டும் சூடு பிடிக்கிறது

# ஈரானியப் படைகளுக்கு பலத்த சேதம்!

# 350 ஈரானியர் பலி; அபடானில் கடும் சமர்!!

லண்டன், நவ. 16

கடந்த சில நாட்களாக தணிந்திருந்த ஈரான் - ஈராக் யுத்தம் மீண்டும் இரு துருப்புகளுக்குமிடையே பலத்த சண்டையின்மூலம் சூடு பிடித்திருக்கிறது.

நேற்று இடம்பெற்ற விமான் - தரைப்படைச்சண்டையில் ஈரானிய படைகளுக்குப் பலத்தசேதமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் எண்ணைநகரமான குஸஸ்தான்மாநிலத்தில் இடம்பெற்ற பயங்கர சண்டையில் 350 ஈரான் துருப்புக்களும், 40 ஈராக் துருப்புக்களும் மாண்டன என்று பாக்தாத் செய்திகள் தெரிவித்தன.

ஈரானின் எண்ணை சுத்திகரிப்பு ஆலைகள் நிறைந்தமற்றுமொரு நகரமான அபடானில் நேற்று நடந்த சண்டையில் ஈரானியத் துருப்புக்கள் ஈராக் படைகளின் நிலைகளைத்தாக்கி பலத்தசேதம் விளைவித்ததாக தெஹ்ரான்வானொலி அறிவித்துள்ளது.

இரு நாடுகளும் தாமே யுத்தத்தில் முன்னேறுவதாக அறிவித்துள்ள போதிலும் யுத்த முனைகளுக்கான சகலதொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

ஈரானின் அபடான் நகரினுள் பல கிலோ மீற்றர்தூரம் உட்புகுந்திருந்த ஈராக் படைகளை ஈரான் துருப்புக்கள் விரட்டி அடித்ததாகவும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (கு)

# மா-சே-துங்கை கொல்ல மனைவி சதித்திட்டம்!

## 10 பேர் மீது குற்றப்பத்திரம் தாக்கல்

பீக்கிங், நவ 16

சீனத்தலைவர் மா-சே-துங்கின் மனைவியார் திருமதி ஜேக்கின் அம்மையார் உட்பட 10 பேருக்கு எதிரான 48 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரம் நேற்றுத்தாக்கல்செய்யப்பட்டது

இக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் சில நாட்களில் ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஜேக்கின் அம்மையாருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்கள சுமத்தப்பட்டுள்ளன.

- சீனப்பாட்டாளிமக்களின் அரசியலமைப்பை சதித்திட்டம் போட்டுக் குலைக்க எத்தனித்தமை.
- தலைவர் மா-சே-துங்கை படுகொலை செய்யத்திட்டமிட்டமை.
- அரசாங்க அதிகாரிகளையும் பொதுமக்களையும்போலிக் குற்றச்சாட்டுக்களின் பேரில் வழக்குத் தாக்கல் செய்து துன்புறுத்தியமை.
- சீனமக்கள் புரட்சியைத் தோல்வியடையச் செய்வதற்கு சதித்திட்டம் தீட்டியமை.

போன்ற குற்றச்சாட்டுக்கள் மீது நடைபெறவுள்ள விசாரணையில் இவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனையும் வழங்கப்படலாமென்று சீனவின் சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். (கு)

# "அரசியல் மாற்றங்களால் யாப்பை மாற்றவேண்டும்"

## காங்கிரஸ் மாநாட்டில் குமார் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

"கடந்த ஒன்றரை வருடகாலமாக அரசில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் 78-ம் ஆண்டு மாநாட்டிற்குத் தயாரிக்கப்பட்டு செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நகல யாப்பை முற்றாக மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது".

தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் மகாநாட்டில் பேசிய தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க்காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

"கடந்த பல வருடங்களாக யாப்பின்படி கட்சி இயங்கவில்லை. கடந்த காலத்தில் உத்தியோகத்திலிருந்தவர்கள் கட்சியை அழித்துவிட்டனர். இதனால் 78 செப்டம்பரில் கூடி புனரமைப்புச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. 77-ம் ஆண்டு பொதுத்தேர்தலின் பின் ஒருவருட காலம் அவகாசம் வழங்கினோம். அவர்கள் அக்கறை எடுக்கவில்லை. நாங்கள் பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டி அந்த உத்தியோகத்தர்களைக் கட்சியிலிருந்தும் பதவியிலிருந்தும் நீக்கினோம்.

அதன்பின் 3 மாத காலத்திற்குள் கட்சியில் 2600 உறுப்பினர்கள் சேர்ந்தார்கள். கட்சி வளரத் தொடங்கியது. அங்கத்தவர்களைச் சேர்த்தோம். 78 டிசம்பர் மாதம் மாநாட்டைக் கூட்ட ஒழுங்கு செய்தோம். ஆனால் நீதிமன்றம் மூலம் தடைபோட்டார்கள். அதனால்மாநாடு நடத்தமுடியவில்லை. தடை நீங்கி எங்களுக்கு இன்று மாநாடு நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

"புதிய யாப்பின்படியே எதிர்காலத்தில் நாம் இயங்க வேண்டும். தொகுதித்தேர்தல் முறை மாற்றப்பட்டு விகிதாசாரமுறை வந்துள்ளதால், உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும்தான் கிளை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (கு)

## காங்கிரஸ் புதிய யாப்பில் சேர்க்கப்பட்டவை

(யாழ்ப்பாணம்)

சமாதானமுறையில் தமிழினத்தின் சுதந்திரத்தைப் பெறுவதென்றும், இதற்கு வட்டமேசை மாநாடு, பேச்சுவார்த்தை ள் போன்ற வழிகளைக் கையாள்வதென்றும், இது சாத்தியமாகாத பட்சத்தில் சுயநிர்ணய உரிமையைப் பாவித்து சுயாட்சியை அமைக்கக் கூடிய வழிவகைகளைக் கையாள வேண்டும்".

தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு புதிய யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளது

புதிய யாப்பில் இடம்பெற்றுள்ள மற்றும் விடயங்கள்:

தமிழ்பேசும் இனத்தின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாப்பது தமிழ் மொழியையும் ஆட்சிமொழியாக்குவது சாதிப்பேயை முற்றாக ஒழிப்பது.

தொழில், கல்வி, வேலைவாய்ப்பு திறமையின் அடிப்படையில் வழங்குவது.

'தமிழ்' பிரதேசத்திற்கு வெளியிலும், மலைநாட்டிலும் வாழும் தமிழ் மக்களின் நலனுக்கு உழைப்பது

உலகத் தமிழர்களுடன் தொடர்பு வைத்திருப்பது உலகின் இனவிடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு வழங்குவது. (கு)

## தரம் உயர்த்த நடவடிக்கை

(மன்னார்)

எருக்கலம்பிட்டி அரசினர் மருத்துவச் சாலையைத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மூதூர் எம். பி. யும் மன்னார் [illegible] சருமான ஜனாப். எம். ஈ. எச். [illegible] தெரிவித்தார். (கு)

## சர்வதேச சுதந்திர ஆசிரியர்சம்மேளனபிரமுகர்- த. ஆசிரியர் சங்கக்குழு சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் உதவிச் செயலாளர் நாயகம் திரு. எலிஜோன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காக இம்மாதம் 23ம் திகதி கொழும்பு வருகின்றார்.

திரு. எலிஜோன் சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் ஒரு தூதுக்குழு கொழும்பு இன்டர் கொண்டினென்டல் ஹொட்டலில் சந்தித்து பலவிவகாரங்கள் தொடர்பாகவும் கலந்து உரையாடவிருக்கின்றது.

இக்குழுவில் பொதுச்செயலாளர் திரு. க. மகாசிவம், நிதிச்செயலாளர் திரு. நா. நடராசா, நிர்வாகச் செயலாளர் திரு. நா. சோதிநாதன் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

இச்சந்திப்பின்போது இ. த. ஆ. சங்கத்தின் சர்வதேசத் தொடர்புகளை வளப்படுத்துவது தொடர்பாகவும், சர்வதேச சம்மேளனத்தின் உதவிகளைப் பெற்று கருத்தரங்குகள் நடாத்துவது தொடர்பாகவும் விவாதிக்கப்படும்.

சர்வதேச சுதந்திரஆசிரியர் சங்க சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் திரு. அன்ட்ரே பிறக்கோனியரின் பணிப்பின் பிரகாரம் பிரான்சிலிருந்து இலங்கை வரும் திரு. எலிஜோன்; நவம்பர் 23-ம் திகதி இரவு கொழும்பை வந்தடைவார். பின்னர் 24ம் திகதி இலங்கைத் தமிழர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடியபின்னர் 25ம் திகதி கொழும்பிலிருந்து பிரான்சுக்கு திரும்புவார். (கு)

## வரவேற்பு

(நெல்லியடி)

யாழ். அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளருமானதிரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு இம்மாதம் 19ம் திகதி யாழ். கப்புது சைவத்தமிழ்க் கலவன் பாடசாலையில் வரவேற்பளிக்கப்படவுள்ளது.

இவ்வரவேற்பு விழாவில் கப்புது அந்தணன் திடல்கிராமிய குடும்ப சுகநல மாதர் அபிவிருத்திமன்றம், பாலர் பாடசாலை ஆகியன திரு, திருமதி. யோகேந்திரா துரைசுவாமியால் அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்படவுள்ளன.

# இந்த ஆசிரியர்கள் விரைவில் நிவாரணம் பெறுவார்கள்

(யாழ்ப்பாணம்)

1977ம் ஆண்டு டிசம்பரில் ஆசிரியர் பயிற்சியை முடித்து வெளியேறி கண்டி கிழக்கு மாவட்டத்தில் நியமனம் பெற்ற தமிழர் ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாது இருந்துவந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளம் விரைவில் வழங்கப்படும்.

இவ்விடயமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. பி. என். எம். பெர்னன்டோவிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார்.

கண்டி கிழக்குப் பிராந்திய கல்விப் பணிப்பாளரை சம்பந்தப்பட்ட தமிழர் ஆசிரியருக்கு ஒருமாத காலத்தினுள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தையும் பாக்கிப் பணத்தையும் வழங்குமாறு பணித்துள்ளதாகவும் அவ்வாறு வழங்கப்படாவிடில் கல்விப் பணிப்பாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலதிகச் செயலாளர் திரு. மகாசிவத்துக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார். (கு)

## பாப்பரசர் - ஸ்மித் சந்திப்பு

பொன், நவ. 16

மேற்கு ஜெர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டுள்ள பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் மேற்கு ஜெர்மன் அதிபர் ஸ்மித்தை சந்தித்து நீண்ட நேரம் உரையாடினர்.

அந்தரங்கமான முறையிலேயே இப்பேச்சுவார்த்தைகள் நடந்தன. (கு)

# இளைஞர் காங்கிரஸ் தலைவராக ஜனாப் அன்வர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர் காங்கிரஸ் தலைவராக ஜனாப் அன்வர், தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர் மகாநாட்டில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ் இளைஞர் காங்கிரஸ் செயலாளராக திரு. ஆர். ஈ. ஆனந்தராசாவும், உப-தலைவராக திரு. வி. குமாரவேலுவும், பொருளாளராக திரு. கணேசுவும், உபசெயலாளராக திரு. கு. கேதீஸ்வரநாதனும், பிரசாரச் செயலாளராக திரு. சண்முகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்க்காங்கிரஸ் உபதலைவர்களாக திருவாளர்கள் எஸ். [illegible]தம்பி, ஆர். என். சிவப்பிரகாசம், ஆர். சிவபாதசுந்தரம், ஏ. தட்சணாமூர்த்தி, பொ. சபாரத்தினம், ஜனாப். எம். யூசுப், டாக்டர் வேலும் மயிலும தெரிவுசெய்யப்பட்டனர்.

தமிழ்க்காங்கிரஸ் உபசெயலாளராக திரு. எஸ். மகேந்திரராசாவும் நிர்வாக செயலாளராக திரு மாணிக்கசோதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ் மாதர் காங்கிரஸ் தலைவியாக செல்வி சாந்தா அபிமனசிங்கமும், செயலாளராக செல்வி யூனிஸ் செல்லத்துரையும் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்த் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராக திரு. விநாயகமூர்த்தியும், செயலாளராக திரு. சி. பொ. ச. முதலியாரும் தெரிவுசெய்யப்பட்டனர். (கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஈஸ்வரன் அல்லது குருவருள் கிட்டுவதற்குப் பணிவும், தன்னல மறுப்பும் இன்றியமையாதவை.

—சுவாமி சிவானந்தர்

## நமது நோக்கு

### உணவில் நஞ்சு!

சிலர் வாழவேண்டுமென்பதற்காக எதையும் எப்படியும் செய்யலாமென்ற நிலை ஏற்பட்டுவிட்டால் மனுக்குலமே இல்லாது ஒழிந்துவிடும்.

இலங்கையில் வடபகுதி மக்கள் புத்திசாலிகள். அசகாய சூரர்கள் என்று கூட அவர்களே பெருமைப்பட்டுக் கொள்வதுமுண்டு.

இந்த சூரத்தனம் இப்பொழுது ஆபத்துக்குமேல் ஆபத்தாகச் சூழ்ந்துகொண்டிருக்கிறது.

விவசாயத்தில் நிலமகளோடு நாளும்பொழுதும் தன் சக்தியையெல்லாம் பயன்படுத்தி வெற்றி காண்பவன் வடபகுதி விவசாயி என்ற பெருமை நியாயமானதுதான்.

வானம் பார்த்த பூமியாகிய வடபகுதியில் ஆழக்கிணறுதோண்டி நீளத்துலா மிதித்து நீர்பாய்ச்சி, இலைகுழையும் சாணமும் கலந்த இயற்கைப் பசளையிட்டுப் பயிர்செய்து உற்பத்தியைப் பெருக்கி நாட்டுக்கும்நாட்டு மக்களுக்கும் நல்லதை வழங்கி தானும் நன்மை பெற்ற விவசாயியை இன்று வடபகுதியில் காண்பதரிது!

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றுவிட்ட யுகத்தில் வடபகுதிவிவசாயியும்முன்னேற்றம் காண விழைந்துவிட்டான்.

இதனால் ரசாயன உரம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு இப்போது குடிநீரில் நச்சுத்தன்மை கலந்துவிட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. காய்கறிகளிலும் நச்சுத்தன்மை கலந்திருக்கலாமென்ற அச்சமும் ஏற்பட்டிருக்கிறது.

யாழ். நகரில் நீரடைப்பு மலகூடங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. இந்தமலகூடங்களினால் நிலத்துக்சடியிலுள்ள நீரூற்றுக்களில் கிருமிகள் கலந்து கிணற்றுநீருடன் அவை சங்கமமாகி மக்களுக்குப் பலவிதநோய்கள் பரவக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆபத்துக்கள் போதாதென்று கடலிலிருந்து பெறப்படும் உணவில் சிலர் தமது இலாபத்துக்காக நஞ்சு கலக்கும் பேராபத்து இப்போது ஏற்பட்டிருக்கிறது.

மனித சடலங்கள் கெட்டுப் போகாமல்விறைப்பேற்படுத்தி குறிப்பிட்ட காலத்துக்கு வைத்திருப்பதற்கு 'ஃபோமலின்' என்றஒருவித நச்சு மருந்து உபயோகப்படுத்தப்படுகிறது. சிலபுத்திசாலிகள் மீன்கள் பழுதுபடாமல் உயிர்மீன் என்று கூறி நல்ல விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிப்பதற்காக இந்த 'ஃபோமலின்' மருந்தைக் கலந்து மீன்களை விறைக்கச்செய்து விற்பனை செய்யும் தந்திரத்தைக் கையாட வழிகாட்டியிருக்கின்றனர்.

சாவகச்சேரிச் சந்தையில் இப்படி விற்பனைக்கிருந்த மீன்களைச் சாவகச்சேரி நகரசபையின் சுகாதாரப் பகுதியினர் விழிப்புடனிருந்து கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

இதன் பின்னர்தான் உணவாக உண்ணும் மீன் நஞ்சாக மாறும் ஆபத்தான நிலை பரவி வருகின்றதென்பதை மக்கள் அறியத் தொடங்கியிருக்கின்றனர்.

இது வடபகுதியுடன் நின்றுவிடக் கூடிய ஆபத்தல்ல என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இது விஷயத்தில் சுகாதாரப்பகுதியினரும் கடற்றொழில் திணைக்களப் பகுதியினரும் உடனடியாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். தொழிலுக்காகக் கடலுக்குப் புறப்படும் படகுகளும் மீன்களுடன் கரைசேரும் படகுகளும் மட்டுமல்லாது சந்தைகளில் விற்பனைக்கு வரும் மீன்களும் கடும் பரிசோதனைக் குள்ளாக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகின்றேம்.

# "ஃபோமலின் ஏற்றிய மீனை உண்டவர் குடல் விறைத்துச் சாகநேரிடும்!

பிணத்துக்கு ஏற்றும் நச்சு மருந்தை மீனுக்கு ஏற்றி விற்கிருர்களாம் சிலர் இதனைச் சாப்பிடுகிறவர்கள் குடல் விறைத்துச் சாக நேரிடும் என்று எச்சரித்தார் ஒரு டாக்டர்.

கடந்த 10-11-80 காலை மீன் வாங்க கரையூர் கடற்கரைக்குப் போனேன். ஆறு கும்பளா மீன் பத்து ரூபாய்க்கு வாங்கினேன். உயிர்த்துடிப்புள்ள வைரமான மீன் கிடைத்ததில் உள்ளப் பூரிப்பு.

வீடு திரும்பியதும் மனைவியிடம் மீனைக் கொடுத்து "நைலோன் வலை மீன் நாறிவிடும், உடனே வெட்டு" என்று எனது வழமையான பல்லவியைச் சொன்னேன்.

அவள் உடனே மீனைவெட்ட ஆரம்பித்தாள். "ஏன் இன்று மீன் கல்லாக இருக்கிறது" என்றுள்.

நான் மீனைத் தொட்டுப் பார்த்தேன். மீன் விறைப்பாக இருந்தது. கொஞ்சமும் நசியவில்லை. எனக்குக் கோபம் வந்தது. "ஐஸ் வைத்த மீனை என் தலையில் கட்டிவிட்டாள் அந்த மீனவப் பெண்" என்று சலித்துக்கொண்டேன்.

மத்தியான உணவுக்கு அமர்ந்தோம். சோறு போட்டு மீன் குழம்புக் கறி பரிமாறப்பட்டது. சாப்பிட மீன் துண்டை விரல்களால் பிரித்தேன். அப்பொழுதும் மீன் துண்டு விறைப்பாக இருந்தது. இது என்ன புதுமை. கொழும்பில் என் அக்கா வீட்டில் ஐஸ் வைத்த மீன் சாப்பிட்டிருக்கிறேன். தொட்டால் உதிர்ந்துவிடும். அத்தனை மெதுமை.

இரவு உணவுக்கும் அதே மீன் கறி பரிமாறப்பட்டது. அப்பொழுதும் மீன் விறைப்பாகத்தான் இருந்தது. ஏன் இந்த மாற்றம் என்று சிந்தித்துக் கொண்டே சாப்பிட்டேன்.

அடுத்த நாள் 'ஈழநாடு' பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தேன்., அதில் சாவகச்சேரி மீன் சந்தையில் நடந்த நிகழ்ச்சி என்னைத் தூக்கிவாரிப் போட்டது. நான் நேற்று உண்ட மீன், மனித சடலங்களுக்கு ஏற்றப்படும் 'ஃபோமலின்' கலந்ததா! அது தான் அத்தனை விறைப்பா!!

நான் ஓர் கடற்றொழில் பரிசோதகனுதலால் உடனே விசாரணையில் இறங்கினேன்.

கடலில் முன் இரவில் நைலோன் வலையில் படுகிற மீன்கள் நாறிவிடுகின்றன. அதை காலையில் கரை சேர்ந்ததும்கருவாட்டு வியாபாரிகளுக்குப்பதனிடுவதற்குக் கொடுத்து விடுகிறார்கள். இப்பொழுது மழைகாலமாதலால் கருவாட்டு வியாபாரிகள் நாறிய மீனை நாடுவது இல்லை. எனவே கடற்றொழிலுக்கும் மனித சடலங்களை "ஃபோமலின்" ஊசி ஏற்றிப் பாதுகாப்பதற்கும் சம்பந்தம் உள்ள ஒருவனது மூளையில், மீன்களை விறைக்கச் செய்து நல்ல விலைக்கு விற்கக்கூடிய எண்ணம் தோன்றியுள்ளது. அவனும் அவன் கூட்டாளிகளும் சேர்ந்து செய்த சதிதான் மீன் கடையிலும் கடற்கரையிலும் விறைத்த மீன்கள் விற்பனைக்கு வரக் காரணம்.

### வியாதி பரவியது

இந்த 'வியாதி' எல்லா மீனவர்களிடமும் பரவிவிட்டது. மாலையில் மீன்பிடிக்கச் செல்லும்போது 'ஃபோமலின்' மருந்தைத் தங்கள் இயந்திர வள்ளத்தில் கொண்டுசெல்கிருர்கள். அதிகாலையில் இரண்டு மணிக்கு வலைகளைக் கடலில் இருந்து எடுக்கிருர்கள். அதில் பட்ட மீன்களை இயந்திர வள்ளத்தில் எடுத்துப் போடுகிருர்கள். பின்னர் கடல் நீரை அள்ளி வள்ளத்தில் ஊற்றுகிருர்கள். அந்தக் கடல் நீரில் 'ஃபோமலின்' கலக்கப்படுகின்றது. காலையில் கரை சேரும் போது அதில் உள்ள மீன்கள் எல்லாம் விறைத்துக் கல்லுப் போல் ஆகிவிடுகின்றன. மீன் நாற்ற வாடையும் மறைந்துவிடுகிறது. அந்த மீனை, மீனவப் பெண்கள் விலை கூறி விற்கிருர்கள். ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் அதனை நல்ல மீன் என நினைத்துப் பெரும் விலை கொடுத்து வாங்கிப் போகிருர்கள்.

தங்கள் லாபத்திற்காக மீனவர்கள், மக்கள் சமுதாயத்திற்கு இத்தனை பெரிய கெடுதியைச் செய்யலாமா?

### உயிராபத்து

நான் ஒரு டாக்டரை இதன் கெடுதி பற்றி விசாரித்தேன். அவர் சொன்னது என்னை வேதனைக்குள்ளாக்கியது அவர் கூறினர், —இரண்டு மூன்று நாட்களுக்கு 'ஃபோமலின்' நச்சு மருந்து ஏற்றப்பட்ட மீன்களைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களின் குடல் விறைத்துவிடுமாம். பின் உணவு ஜீரணமே ஆகாதாம். கொஞ்ச நாட்களுக்கு நடைப்பிணமாக உலவி, பின் உயிர் போய்விடுமாம்.

### நைலோன் வலை மீன்களைத் தவிர்ப்பது நன்று

மீன் வாங்குபவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். விறைத்துக் கல்லுப் போல் உள்ள மீன்களை வாங்கப்படாது. சிறுவலை, தண்டு வலை, விச்சுவலை மீன்களைப் பார்த்து வாங்கவேண்டும். நைலோன் வலை மீன்களைத் தவிர்ப்பது நல்லது

'ஃபோமலின்' ஏற்றப்பட்ட மீன்கள் பல நாள் நாறுமல் இருப்பதால், ஐஸ் போடாமலே கொழும்பு மீன் சந்தைக்கும் லொறிகளில் ஏற்றப்படுகிறதாம்..

கடற்றொழில் பரிசோதகர் கையில் சட்டம் உள்ளது. நஞ்சூட்டப்பட்ட மீன்களை விற்பனை செய்பவர்கள் மேல் அவர்கள் வழக்குத் தொடரலாம், குற்றவாளிகளுக்குச் சிறையுடன் பெரிய அபராதமும் காத்திருக்கிறது. உடனே கடற்றொழில் பரிசோதகர்கள் செயலில் இறங்கி, மக்களை எதிர்நோக்கியுள்ள பெரிய ஆபத்தில் இருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

- தம்பி. வேலழகன் -

## மக்கள் கருத்து

### ஏன் இந்த மௌனம் ஐயா!

கடந்த மாநகரசபைத் தேர்தலில் யாழ் மாநகர மக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றேடு கலந்து போயினவோ என்று கருத வேண்டியிருக்கிறது. உலகிலேயே முதற்தரமான அழகான சுகாதாரமான, சுத்தமான நகரமாக யாழ் நகரை மிளிரவைப்போம் என்று மேடைக்கு மேடை முழக்கியதை நாம் இன்னும் மறக்கவில்லை. ஆயின் உறுதி தந்தவர்கள் வாக்கைப் பெற்றதோடு அவ்வுறுதிகளை இவ்வளவு விரைவில் உதாசீனமும் செய்துவிடுவார்கள் என்பதை யார்தான் எதிர்பார்க்க முடியும்?

அரசியலுக்குப் புதியவர்கள் ஆட்சிக்குப் புதியவர்கள் அனுபவமற்றவர்கள் தாங்கள் என்பதைக் காட்டிக் கொள்கிருர்களா என்பதும் புரியவில்லை, இந்தனைக்கும் எனது குறை மிகவும் சிறியதொன்றே. ஆயினும் அது எனது வாழ்வுப் பிர்ச்சனையாகும்?

சுகாதாரமான ஆரோக்கியமான வாழ்வுக்கு வழியமைக்கும் வகைகள் கூற வந்தவர்க்கு எனது சுற்றுடலைப் பாதிக்கும், மிக மோசமாகப் பாதிக்கும் உடல்நலத்துக்கே பெருந்தீங்குவிளைவிக்கும் ஒரு பிரச்சனை சம்பந்தமாக 1979 நவம்பர் மாதம் 9 ம் திகதி மாநகர ஆளுநர் சபைக்கு முறையிட்டேன். "தாங்கள் குறித்த விஷயத்தைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது." என்று ஏலவே அச்சிடப்பட்ட தபால் அட்டை ஒன்று பதிலாகக் கிடைத்தது. அதன் பின்னர் 1979 நவம்பர் 14, 27 ம் திகதிகள் (இரு தடவைகள்) அதே பிரச்சனையை முன்வைத்து மீண்டும் சபை முதல்வர் உட்பட சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவித்திருந்தேன். அதே 'அஞ்சல்' அட்டைகள்தான் பதிலாகக் கிடைத்திருக்கின்றன.

ஒரு மாதம் வரை பொறுத்திருந்தும் நடவடிக்கையைக் காணமுடியாமல் கடிதமூலம் 1980 [illegible] தேதியில் நினைவூட்டினேன். இன்றுவரை ஒரு தகவலும் இல்லை. ஒரு வரியிறுப்பாளனுயினும், இல்லாவிடினும், ஒரு பிரசையின் சுகநலனைப் பேணுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டிய சுகாதாரப் பகுதியினர் அங்கு முறைப்படுபவர்களின் முகவரிகளை ('அஞ்சல்' அட்டைகளை) எழுதுவதில் மட்டும் சுகாதார சேவை செய்கிருர்களா என்பதும் விளங்கவில்லை.

கடிதப் போக்குவரத்தில் கருத்தில்லையென்று உணர்ந்து கொண்டபின் நேரில் உரிய அதிகாரிகளைச் சந்தித்தேன், சுகாதாரப் பகுதி அதிகாரியொருவர் (ஓவசியர்) அனுதாபத்தோடு விசாரித்தார். மறுநாள் தாம் நேரில் வருவதாகவும் ஆவன செய்துதருவதாகவும் வாக்களித்தார். எதுவும் நடக்கவில்லை.

இவை யாவற்றையும் தெரியப்படுத்தி கனம் மாநகர முதல்வருக்குஎழுதியிருந்தேன். இதுவரை அவரிடமிருந்து 'மௌன'மொன்றே நடவடிக்கையாக எடுக்கப்பட்டுள்ளது

இனி எவரிடம் செல்வது? யாரிடம் முறையிடுவது?

எஸ். கந்தையா
ஆசிரியர்
198/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

## "சேவையின் மூலம் இறைவனைக் கண்டார் அன்னை திரேசா"

(அரியாலை)

"கிறீஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களே கிறீஸ்தவர்களாவர். அவரது சிலுவை மரணத்தின் மூலம் எமது பாவங்கள் இரட்சிக்கப்பட்டு நாம் மீட்கப்பட்டோம். அவரை எமது வழிகாட்டியாகவும் விசுவாசத்தின் பிறப்பிடமாகவும் ஏற்றுக்கொண்டு வாழும் நாம் நமது நாளாந்த வாழ்க்கையின் மூலம் அவரை வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும்".

இவ்வாறு நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் நடைபெற்ற திருவிருந்து ஆராதனையில் அருளுரை நிகழ்த்திய யாழ்ப்பாண ஆர்ச். டீக்கன் அருட்திரு: சாம்டி ஹோர்சிங்டன் அடிகளார் பேசுகையில் குறிப்பிட்டார், அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:

இத்தாலி தேசத்தில் பிறந்த செல்வி. மேரி திரேசா கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ ஊழியத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து கல்கத்தாவுக்கு வந்து தனது கிறீஸ்தவ ஊழியத்தை மேற்கொண்டார். வறுமைப்பிணியில் வாடிய பல லட்சக்கான மக்களையும் நோயினல் அவதியுற்ற மக்களையும் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான குழந்தைகளையும் கண்டு மனம் வருந்திய அவர் இத்தகைய நிலையில் வாழும் மக்களுக்கு வாழ்வளிக்க விரும்பித்தமது சேவையை மாற்றியமைத்தார். மக்கள் சேவையே இறைவன் சேவை என்ற குறிக்கோளுடன் தமது சேவையை மாற்றி கிறிஸ்து தம்மீது செலுத்திய அன்பை மக்கள் மேல் செலுத்தத் தொடங்கி அவர்களுக்கு புதிய வாழ்வை அளித்தார். சேவையைத் தனது கடமையாகக் கொண்ட அம்மையார் சேவையின் மூலம் இறைவனைக் கண்டார். அவரின் சேவை மூலம் வாழ்வு பெற்ற மக்கள் இன்று அவரைக் தெய்வமாக மதிக்கிறார்கள். இத

(5-ம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளத்தில் மாதிரிக்கிராமம்

(துணுக்காய்)

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள உயிலங்குளத்தில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது.

உலக பட்டினி ஒழிப்பு தாபனம் இதனைஉருவாக்கஉள்ளது. இதற்கென ரூபா 5 லட்சம்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 30 ஏக்கரில் மாதிரிப்பண்ணை ஒன்று உருவாக்கப்பட்டு அங்குள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படும். 2 ஏக்கர் வீதம் 30 பேருக்கு காணி வழங்கப்பட்டு வீடும் கிணறும் அமைத்துக்கொடுத்து மேட்டுநிலப்பயிர்ச்செய்கைக்கு ஊக்கமளிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வராத்துப்பளை சீவல் தொழிலாளி கொலை வழக்கு:

# 'உன்னை கொலை செய்வேன்'

## என்று 1-ம் எதிரி பயமுறுத்தினர்!

### கொலையுண்டவரின் மனைவி சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

"எனது கணவன் கொலை செய்யப்பட்ட தினம் காலை 1-ம் எதிரி எங்கள் வீட்டுப் படலைக்கு வந்து உன்னைக் கொலை செய்வன் என்று பயமுறுத்தினர். அப்பொழுது 1-ம் எதிரிக்கும் எனது கணவருக்கும் இடையில் வாக்குவாதம் நடைபெற்றது. மாலை எனது கணவரை யாரோ அடித்துக்கொலை செய்துவிட்டார்கள் எனக் கேள்விப்பட்டேன்

இவ்வாறு சீவல் தொழிலாளி நாகன் வல்லிபுரம் கொலைவழக்கு விசாரணையில் கொலைசெய்யப்பட்ட வல்லிபுரத்தின் மனைவியான செல்லம்மா (வயது 50) சாட்சியமளிக்கையில் சொன்னர்.

1979 ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி சீவல் தொழிலாளி நாகன் வல்லிபுரத்தை வராத்துப்பளை ஆனைவிழுந்தான் வீதியில் வைத்து வெட்டிக் கொலைசெய்தார்கள் என புலோலி கிழக்கு இலக்கணாவத்தையைச் சேர்ந்த மாணிக்கம் தெய்வேந்திரன் புலோலி தெற்கைச் சேர்ந்த முருகன் கந்தையா அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த சின்னப்பு குலசேகரம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி தம்பிரத்தினம் சட்டத்தரணி முத்துக்குமாருவின் அனுசரணையுடன் ஆஜராகி இருந்தார்.

பொலிசார் சார்பில் சார்ஜன் வடிவேலு சார்ஜன் விவேகானந்தன் ஆகியோரும் பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணி என். கிருஸ்ண ராசாவும் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த செல்லம்மா சொன்னதாவது:

"இறந்தவர் எனது கணவர் 16-11-79 அன்று ஐப்பசி வெள்ளிக்கிழமையான படியால் எனது கணவர் இறந்த தினம் எனக்கு நல்ல ஞாபகமாவுள்ளது. அன்று மாலை 6-30 மணிபோல் எனது கணவனையாரோ அடித்துக் கொலை செய்து போட்டார்கள் என நான் கேள்விப்பட்டேன்.

அன்று காலை 8 மணியளவில் எனது கணவர் வீட்டிலிருந்து போகும்போது 1-ம் எதிரி எங்கள் வீட்டுப்படலைக்கு வந்து "உன்னைக் கொலைசெய்வன்" என்றுபயமுறுத்தினர். அப்போது எனது கணவருக்கும் 1-ம் எதிரிக்குமிடையே வாக்குவாதம் நடந்தது. எனது கணவன் கள்ளுக்குதத்தில் பில் கிளாக்கா நியமனம் பெற்றதன் காரணமாக 1-ம் எதிரிக்கு கோபம் இருந்தது அதனைவிட நாங்கள் இருவரும் எதிரிகள் நாங்கள் இருக்கும் காணிக்குள்ளால் பாதைவைத்துப் போவதை விரும்பாமலிருந்தோம். அதனுல் 1-ம் எதிரிக்கும் எனது கணவருக்கும் பிரச்சினை ஏற்பட்டிருந்தது.

"இந்தச் சம்பவம் நடக்க முன்பு பாதைப் பிரச்னை சம்பந்தமாக எனது கணவர் 1-ம் எதிரிக்கு எதிராகப் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார்.

சம்பவதினம் எனது கணவர் பி. ப. 4 மணி போல் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்ருர். அவர் சைக்கிளில் சீவல் தொழிலுக்கே சென்ருர். அவர் போகும் போது சீவல் தொழிலுக்குத் தேவையான பொருட்களையும், டோர்ச்லைட்டையும் எடுத்துச் சென்ருர். மாலை 6-30 மணி போல் எனது மச்சான் வந்து எனது கணவன் இறந்துவிட்டார் எனக் கூறினன். நாங்கள் உடனே அந்த இடத்திற்குப் போய்ப் பார்த்தோம். அங்கு எனது கணவன் இறந்து கிடந்ததைக் கண்டேன். பொலிசாரும் அங்கு நின்றுர்கள். அப்போது நன்ருக இருட்டிவிட்டது. பொலிசார் எனது வாக்குமூலத்தைப் பதிந்தார்கள். எனது கணவரின் கொலைச் சம்பவத்தில் 1-ம், 2-ம் சந்தேக நபர்களைச் சந்தேகித்து பொலிசாருக்கு கொடுத்த வாக்குமூலத்தில் இவர்களின் பெயரைக் கொடுத்தேன்.

சாட்சிக்கு நீதிமன்றத்தில் ஒலியால் இனைக்கப்பட்ட ஒரு கூடை, கத்தி, டோர்ச்லைட், சைக்கிள், சாரம் ஒன்று என்பன காட்டப்பட்டபோது அவை யாவும் கொலைசெய்யப்பட்ட தனது கணவனுடையன என அடையாளம் காட்டினர்.

எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தம்பிரத்தினம் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி சொன்னதாவது:

"நான் பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் எனது கணவருக்கும் 1-ம் எதிரிக்கும் அன்று காலை 8மணிக்கு நடந்த பிரச்னை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். நான் முன்பு கூறியது போல் அன்று காலை 8 மணிக்கு அப்படி ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்று கூறுவதை மறுக்கிறேன். அப்படி ஒரு சம்பவம் நடந்ததாக நான் பொலிசாருக்குச் சொல்லவில்லை என்பதையும் மறுக்கிறேன்." (கு)

## "நடுரேட்டில் ஒரு ஆள் படுத்திருந்தது தெரிந்தது"

### பஸ் சாரதி சாட்சியம்

(புலோலி நிருபர்)

'நான் பஸ்சைச் செலுத்திக் கொண்டு போகும்போது வராத்துப்பளை நடுரேட்டில் ஒரு ஆள் மல்லாந்த மாதிரிப் படுத்திருந்தது தெரிந்தது நான் உடனே பஸ்சை நிறுத்திவிட்டு இறங்கிச் சென்று பார்த்தபோது அந்த ஆளின் உடம்பிலிருந்து இரத்தம் போய்கொண்டிருந்தது. ஆள் இறந்தது போலவும் தெரிந்தது.

இவ்வாறு நாகன் வல்லிபுரம் கொலைவழக்கு விசாரணையில் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ பஸ்சாரதி காத்தாய் வீரத்தி (வயது 41) சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

விசாரணையில் தொடர்ந்து சாட்சியமளித்த இ. போ. ச. பஸ் சாரதி வீரகத்தி குறிப்பிட்டதாவது:

"எனக்கு 16-11-79 ம் ஆண்டு ஞாபகமாக இருக்கின்றது. அன்று நான் பி. ப. 6-30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து தாளையடிக்குச் செல்லும் 762 ம் பாதை இலக்க பஸ்சில் கடமையாற்றினேன்.

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட அந்த பஸ்சை மருதங்கேணி ரேட்டால் செலுத்திச் செல்லும்போது வராத்துப்பளையில் நடுரேட்டில் ஒரு ஆள் மல்லாந்த மாதிரிப் படுத்திருந்ததைக் கண்டேன். அப்போது நேரம் 7½, 8 மணியிருக்கும் பஸ் வெளிச்சத்தில் அந்த ஆளைக் கண்டேன்,

நான் ஆளைக் கண்டவுடன் சுமார் 20 அடி தூரத்திற்கு அப்பால் பஸ்சை நிறுத்தி நானும் பஸ்சில் வந்த பிரயாணிகளும் இறங்கி நடந்து சென்று அந்த ஆளைப் பார்த்தோம். அவரது உடம்பிலிருந்து இரத்தம் போய்க் கொண்டிருந்தது. அவர் இறந்ததுபோலத் தெரிந்தது. நான் உடனே திருபிவந்து பொலிசாருக்குத் தகவல் கொடுத்தேன்.

## சுருக்கிட்டுத் தற்கொலை

(பண்டத்தரிப்பு)

மனைவியும், பிள்ளைகளும் தாய்விடு சென்றிருந்த நேரம் பார்த்து 26 வயது வாலிபர் தமது கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை திருஞானசம்பந்தமூர்த்தி என்ற இவ்வாலிபரின் மரணவிசாரணை திடீர் மரணவிசாரணை அதிகாரியும் உத்தியோகப் பற்றற்ற நீதிபதியுமான திரு. கே. சேனுதிராசா முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் காலஞ்சென்றவரின் மனைவி பரமேஸ்வரி சாட்சியமளிக்கையில் காலம் சென்ற தமது கணவர் கடந்த மூன்று வருடங்களாகத் தொய்வு நோயினுல் அவஸ்தைப்பட்டு வந்தாரென்றும் பல இடங்களில் வைத்தியம் செய்தும் சுகம் ஏற்படவில்லை என்றும் சம்பவதினம் தானும் மூன்று பிள்ளைகளும் பரந்தனிலுள்ள தாய் வீட்டிற்கு சென்றிருந்தபோது தமது கணவர் இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது என்றும் தெரிவித்தார். சங்கானைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. (அ)

## சேவையின்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னுல் அவரை அன்னை திரேசா என்று அழைக்கிறர்கள், சிறந்த அழகணுகவும், பலசாலியாகவும் விளங்கிய திரு. டேமியன் குருத்துவ வாழ்வை மேற்கொண்டு அன்று மக்களாலே கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்த குஷ்ட ரோகிகள் மத்தியில் தனது இறைபணியை ஆரம்பித்து அவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து தனது அளப்பரிய சேவையின் மூலம் குஷ்ட ரோகிகளுக்கு வாழ்வு அளித்தார்; அவர்களை நேசித்தார்".

இடநெருக்கடி காரணமாக

"அறிவியல் பூஞ்சோலை"

இன்று வெளிவரவில்லை.



கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் நூற்றுண்டு விழாவையொட்டி அகில இலங்கை ரீதியாக பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தமிழ்ப் பேச்சுப் போட்டியில். யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த செல்வி சுலோசனு சண்முகநாதன் இரண்டாம் இடத்தைப் பெற்று, தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக்கொண்டார். பிரதமரின் துணைவியார் திருமதி பிரேமதாஸா அம்மாணவிக்கான தங்கப்பதக்கத்தைவழங்குவதைஇட் படத்தில் காண்க. கல்லூரி மாணவத் தலைவியான செல்வி சுலோசனு பல போட்டிகளிலும் முன்னர் தங்கப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

## சபையில் சிந்தியவை

ஈ. எல். சேனநாயக்க: குடியேற்ற காலத்திலிருந்து கோதுமை மாவுக்கு எமது மக்கள் அடிமையாகிவிட்டார்கள். எனது பிள்ளைகள்கூட சோற்றைவிட பாணைத்தான் விரும்புகிருர்கள்.

ஈ. எல். இன்று நாடுமுழுவதும் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. தினசரி விநியோகிக்கப்படும் 72 ஆயிரம் ருத்தல் கோதுமை மாவில் 15 ஆயிரம் ருத்தல்தான் விற்பனையாகிறது.

ஈ. எல். எருமைகளை இறைச்சிக்கு பயன்படுத்துவதனுல் விவசாயி கஷ்டமுறுகிருன்.

ரி. சிவா: 'டிராக்டர்' ஒன்றின் விலை இன்று ஒரு லட்சத்து 89 ஆயிரம்.

0 0 0

ஈ. எல். இன்னும் 2 ஆண்டுகளில் விவசாயப் புரட்சியில் நாம் வெற்றி காண்போம்.

ஈ. எல். நாடுமுழுவதும் 4500 விவசாய உத்தியோகத்தர்களை நியமித்துள்ளோம். அவர்கள் மூலம் வீட்டுத்தோட்டங்களில் மக்களை ஊக்குவிக்கப்போகிறோம். வீட்டில் பயிரிடக்கூடிய செடிகளைப் பற்றிய பிரசுரத்துடன் பல்வேறுவகை விதைகளைக் கொண்ட இந்த 'பைக்கற்'றை ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்கிறோம். (சகலருக்கும் காண்பிக்கிருர்.)

தர்மர்: அதைத் தாருங்கள் பார்ப்போம்.

ஈ. எல். நிச்சயமாக (சேவகரிடம் கொடுத்தனுப்புகிருர்.)

சபாநாயகர்: பார்த்தபின் திருப்பிக்கொடுத்துவிடுங்கள்.

ஈ. எல். வேண்டியதில்லை அவரே வைத்திருக்கட்டும்.

சபாநாயகர்: He Comes From Jaffna!

ஈ. எல்.: சபாநாயகர் அவர்களே, நீங்களும் உங்கள் கொழும்பு வாசஸ்தலத்தில் வீட்டுத் தோட்டச் செய்கையை ஆரம்பியுங்கள் என்று உங்களையும் நான் கேட்கிறேன்.

0 0 0

ஈ. எல். நிதியமைச்சரின் 'தலையிடியை' நாம் உணர்கிறோம்; ஆனுல் அவர் அதை அனுபவிக்கிருர்.

0 0 0

சம்பந்தன்: எங்களுக்குள்ள சில பிரச்னைகளைப்பற்றி இங்கு நாம் குறிப்பிடும்போது சிலர் கொதிப்படைகிருர்கள், ஆனுல் அவர்களைக் கண்டு நாம் பின்வாங்கிவிடப்போவதில்லை. எமக்கு அந்த உரிமை இருக்கிறது என்பதனை எச்சரிக்கையுடன் நான் இங்கு கூறிவைககிறேன்.

சம்பந்தன்: அபிவிருத்திக்காக வயிற்றை இறுகக் கட்டும்படி மக்களுக்குக் கூறுகிருர்கள்.

சபாநாயகர்: நம் மதியபோசனத்தை முடித்துக்கொண்டு இறுகக் கட்டுவோமா?

சம்பந்தன்: சரி சபாநாயகர் அவர்களே: எமது 'பட்டி'களை இழகச் செய்துகொண்டு செல்வோம்.

0 0 0

எம். டி. எச். ஜயவர்த்தன: கனடா பல்கலைக் கழகத்திலிருந்து ஒருமாணவன் 130 ரூபா செலவுசெய்து, எனது கடந்த வரவு-செலவுத் திட்ட உரைபற்றி குறிப்பிடப்பட்டுள்ள பிரசுரம் ஒன்றை எனக்கு அனுப்பிவைத்திருக்கிருர் அவரை நான் அறியவும்மாட்டேன்.

விஜேசிறி: அதனைச் சபாபீடத்தில் சமர்ப்பியுங்கள்.

எம். டி. எச்.: இல்லை, இல்லை; சபாபீடத்தில் சமர்ப்பித்தால் அவர் யார் என்பதைத் தெரிந்துகொண்டு அவரின் வெளிநாட்டு செலாவணியை நிறுத்திவிடுவார்கள்.

0 0 0

எம். டி. எச்: நான் 'பட்ஜட்'டைப் பற்றிக் கடுமையாக விமர்சித்தால் முன்வரிசை நண்பர்கள் எனது தொகுதிக்கு எதுவும் செய்யமாட்டார்கள்.

0 0 0

எம். டி. எச்: எனக்கு நிதியமைச்சர் மீது தனிப்பட்ட எதிர்ப்பு எதுவுமில்லை. அவர் அனுபவமும், அறிவும்பெற்றவர்.

எம். டி. எச்: நான் ஒரு பொருளாதார நிபுணன் அல்ல. ஏதோ கைம்பழக்கம்; அவ்வளவுதான்.

எம். டி. எச். என்னுடைய வீட்டு வேலைக்காரன் என்னிடம் வந்து, 'ஐயா, இம்முறை பட்ஜட்டில் நீங்கள் பேசாதீர்கள்' என்ருன்

(விஜேசிறி ஏதோ கூறுகிருர்)

எம். டி. எச்: நீர் தலையைப் போடாமல், சும்மா இரும்!

0 0 0

வின்சன்: டயஸ்: 'ரு இன் வன்', 'திறி இன் வன்'

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யாழ். பல்கலைக் கழகத்தில்

# இலக்கணப் பாடத்திற்கு நல்ல வாய்ப்பு ஏற்படலாம்!

## பாராட்டு விழாவில் இலக்கண வித்தகர் நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனக்குப் பட்டமளித்துக் கௌரவித்தமை; அது பழைய இலக்கண மரபினைப் போற்றுவதாகவே கருதமுடியும். இதனைக் கொண்டு எதிர்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பழைய இலக்கணப்பாடநெறிக்கு நல்வாய்ப்பிருக்குமென நம்பலாம்."

இவ்வாறு முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலத்தில் நடத்திய பாரட்டு விழாவில், நன்றி தெரிவித்து உரையாற்றி இலக்கண வித்தகர் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு, யாழ்ப்பாணப் பலகலைகழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அ.சண்முகதாஸ் தலைமை வகித்தார்.

திரு. நமசிவாயதேசிகர் தொடர்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"இலக்கண மரபுகளைப் பாதுகாத்து, எதிர்கால சந்ததியினருக்கு பெரும்பணியாற்றிய வித்துவான் சுப்பையபிள்ளை, வித்துவான் கணேசையர் ஆகியோருக்கே இப்பட்டம் வழங்கப்படவேண்டும்.

"கற்றவர்கள் தமது கல்வியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். நான் வித்துவான் கணேசையாவுடன் கலந்து அவர்வழிநின்று கற்றவன். இதனால் நான் பெற்ற கல்வியை, எந்த ஊதியமும் வாங்காமல் மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கின்றேன்.

நாடக வித்தகர் கலைவரசு சொர்ணலிங்கத்தின் நாடகப் பணிபற்றி பாராட்டி திரு. ப. சண்முகலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது:

"ஒரு நூற்றுண்டு சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் கலையரசர்; தமது இளமைக்காலம் முதல் நாடகத் துறைக்கு பெரும் பணியாற்றியுள்ளார். உலக நாடுகளில் தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் ஆரம்பமாவதற்கு முன்னர், இலங்கை வானொலியில், தமிழ்பாட்டு பாடிய முதல் தமிழர் கலையசுரதான். இவற்றைவிட வானொலியில் முதல்நாடகம் நடித்தவரும் கலையரசுதான்."

திரு. இ. மகாதேவா உரையாற்றுகையில் ,,இன்று நான் யுகசத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். மன்னிடம் குடி கொண்டிருக்கும் அசாத்திய தெம்பு காரணமாக, நான் பல விடங்களை செய்துவருகின்றேன். ஏதோ நான்செய்த புண்ணிய வசத்தால், பலமுறை மரணத்துடன் போராடி வாழ்ந்து கொண்டிருக்கிறேன்" என்றுர்.

இவ்விழாவில், புலவர் பார்வதிநாதசிவத்தின் "இரு வேறு உலகம்" ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நூலை ஆய்வு செய்த பண்டிதர் க. வீரகத்தி தமது ஆய்வில் கூறியதாவது:-

"புலவர் பார்வதிநாதசிவத்தின் கவிதைகளில் உட்பொருளும் நடை அழகும் நிறைந்திருக்கும் அவரின கவிதைகளை இன்னெருவர் உதவியின்றி இலகுவாக ரசித்துச் சுவைத்துக் கொள்ளலாம்" என்றுர்.

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய "சி. வை. தாமோதரம்பிள்ளை நூல்வெளியீட்டுத்துறைக்கு ஆற்றிய தொண்டுகள்" என்ற தலைப்பிலான கட்டுரையும் ஆய்வுக்கு எடுக்கப்பட்டது.

விழாவில் திருவாளர்கள் க. சொக்கலிங்கம், ஆ. சிவநேசச்செல்வன், க. உமாமகேஸ்வரன் ஆகியோரும் உரையற்றினர். (கு)

### சாவகச்சேரி குடிநீர் விநியோகம்:

# பத்துக்கோடி ரூபா ஒதுக்கீடு!

## யாழ். மாவட்ட அமைச்சர் தகவல்

மட்டுவில்)

"தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்னின்று உழைக்கிறது. எங்கள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, சகல இன, மத, மொழிகளையும்சகோதரத்துவத்துடன் நடத்துகிறுர். சகல கட்சி உறுப்பினர்களையும் எதிர்க் கட்சியினரையும் ஒரேமாதிரி நடத்துவதோடு, கிழக்கு, வடக்கு, மத்திய மாகாணம் என்ற வேறுபாடின்றி, சகல தொகுதிகளுக்கும் ஒரேமாதிரியான நிதயே ஒதுக்கப்படுகிறது."

இவ்வாறு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயக்கோன் கொடிகாமத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

கச்சாய் கொடிகாமம் பகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் திரு. கே. வி. பி.வேலாயுதபிள்ளை தலைமையில் கொடிகாமம், திருநாவுக்கரசு மடாலயத்தில் கொடிகாமம்,கச்சாய்ப் பகுதி ஐக்கிய தேசியக் கட்சிக் கிளைகளினுல் ஒரு வரவேற்பு நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசும் போதே மாவட்ட அமைச்சர் திரு.விஜயக்கோன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:- தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு அரசாங்கத்தை நிறுவ முடியாத கட்சி. இந்தக் கட்சியை நீங்கள் நம்புவதால் பயனில்லை. 1977-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீங்கள் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரை வடக்கிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்திருந்தால், இன்று உங்கள் பிரதிநிதியே உங்கள் மாவட்ட அமைச்சராக இருப்பார். நான் இங்கு வந்திருக்க முடியாது.

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியில் மிகவும் அக்கறை காட்டும்படி ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆணையிட்டுள்ளார். அவர் ஆணையை நான் செயற்படுத்தி வருகிறேன்.

நாம் இத்தொகுதிக்கு இந்த ஆண்டு அபிவிருத்திக்காக 25 இலட்சம் ரூபா ஒதுக்கியுள்ளோம். சகல தொகுதிகளுக்கும் பாகுபாடின்றி நாம் இதே தொகையையே ஒதுக்கியுள்ளோம்.

இத்தொகுதிக்கும், குடிநீர் விநியோகத் திட்டத்திற்காக ரூபா 10 கோடி ஒதுக்கீடு செய்துள்ளோம். பருத்தித் துறைத் தொகுதிக்கும் ஒதுக்கியுள்ளோம். இலங்கையில் வேறெந்தத் தொகுதிக்கும் இத்தொகை ஒதுக்கீடு செய்தது கிடையாது.

இதுமட்டுமல்ல எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னரே, இப்பகுதிக்கு மின்சார விநியோகம் கொடுக்கப்பட்டது. எமது அரசாங்கம் எந்தவிதவேறுபாடுகளுமின்றி, சகல தொகுதிகளுக்கும் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கி வருகிறது. இருக்க வீடற்ற ஏழைகட்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கிறது.

உங்கள் பகுதிகளை நீங்களே அபிவிருத்தி செய்யும் நிலையை உருவாக்கவே, மாவட்ட அபிவிருத்திச் சபையை எமது அரசாங்கம் கொண்டு வருகிறது. கடந்த அரசாங்கத்திற்கும், ஜனதிப்தி திரு. ஜே. ஆர். அரசாங்கத்திற்குமிடையில் பாரிய வேறுபாடுகள் உண்டு. எமது அரசு சகல இன, மத, மொழி மக்களும் இந்நாட்டு மக்கள், சகோதரர்கள் என்றே அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றி வருகிறது. முந்திய அரசு அப்படியல்ல. சகல துறையிலும் தொகுதிக்குத் தொகுதி வேறுபாடு காட்டி வந்துள்ளது பக்கள் அறிந்ததே.

வெகு விரைவில் மாவட்ட அபிவிருத்திச் சபை வருகிறது. அப்பொழுது நீங்கள் அனைவரும் ஏகோபித்து எமது கட்சி உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இப்படியாகப் பூரண ஒற்றுமையைக் காட்டுவதின் மூலமே உங்கள் கோரிக்கைகள் விரைவில் நிறைவேற வழி பிறக்கும்.

கொடிகாமம் சந்தை வேலைகள் அரைவாசி முடிந்துவிட்ட போதிலும், நீங்கள் கோரியபடி அதுபற்றி நடவடிக்கை எடுப்பேன்.

பண்டிதர் பொன் சந்தையனுர், திரு.மா. சிதம்பரநாதன், திரு, எஸ். வைத்திலிங்கம், திருமதி எஸ்.பராசக்தி,செல்வி செ. கலாசோதி ஆகியோரும் பேசினுர்கள். (க)

## உப அதிபராக நியமனம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியின் உப அதிபராக திரு. ரி. குணசீலன் நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

பரி. யோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர், லண்டன் பி. எஸ். சி. பட்டதாரிப் பரீட்சையில் சித்தி பெற்று 1958-ம் ஆண்டு இக்கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றுர். இவர் கல்லூரியின் விடுதிச் சிரேஷ்ட ஆசிரியராகவும், கல்லூரியின் விளையாட்டுச்சங்கச் செயலாளராகவும், மத்திய பிரிவின் பொறுப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். (அ)

## இளைஞர் வார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக் கழகத்தின் ஆதரவில் இளைஞர் வார விழா சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் யாழ். ரோட்டறிக் கழகத் தலைவர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. விழாவிலே சென். ஜோன்ஸ் கல்லூரி இன்ரராக்ற் கழக மாணவர்களுக்கும் சென். பற்றிக்ஸ் இன்ரராக்ற் மாணவர்களுக்கும் இடையில் "அரசியலில கல்லூரிமாணவர்கள் பங்கு பற்றுவது சரியா இல்லையா" என்னும் பொருள் பற்றி விவாதம் நடைபெற்றது.

இவ்விவாதத்தில் சென். ஜோன்ஸ் கழகம் வெற்றிபெற்றது. சிறந்த விவாதப்பேச்சாளராக சென். ஜோன்ஸ் கல்லூரியைச்சேர்ந்த செல்வன் சஞ்சயன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த விவாதக்குழுவிற்கு வைத்திய கலாநிதி பா. கோ. பாரதி வெள்ளிக்கேடயம் ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெறற நாடகப் போட்டியிலும் சென். ஜோன்ஸ் கழகம் வெற்றி ஈட்டி வெள்ளிக்கிண்ணத்தையும் பரிசாகப்பெற்றது. சிறந்த நடிகனைத் தெரிவுசெய்யப்பட்ட சென். யோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ரி. துஷ்யந்தன் பரிசுபெற்றுர்.

இவ்விழாவினையொட்டி இன்ரராக்ற் மாணவர்கள் மரம் நாட்டுவைபவத்தையும் யாழ். அரசினர் வைத்தியசாலையில் வழிகாட்டி பலகைகளுக்கு மைபூசும் வைபவத்தையும் ஆரம்பித்துவைத்தனர்.


# வொலரோன் ஈ. சீ. 50%

வொலரோன் ஒரு சர்வபூச்சி நாசினி, மிளகாய், வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் தத்துவெட்டி, வெட்டுப்புழு முதலாம் சகல தரைப் பூச்சி புழுக்களையும் ஒழித்துக்கட்டும், மிளகாய், வெங்காயப் பயிர்க் கம்பளப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதில் விசேஷ சக்தி வாய்ந்தது வொலரோன்.




ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

தொலைபேசி: 93563, 96331-6

200 மி. லீட்டர்

ரூபா 45-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
Bugsy Malone

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர் நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை
பயங்கர சண்டைகள் நிறைந்த படம் (புதிய பிரதி)

வெற்றி முழக்கமிடும் 7-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-ஜெய்சித்திரா
அசோகன்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

கடைசி 4 தினங்கள்
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

சாந்தி 17-19--வரை மூன்று தினங்கள் மட்டும்
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
மூன்று முடிச்சு புதிய பிரதி
கே. பாலசந்தர்
கமல் - ஸ்ரீதேவி - ரஜனி - ஒய். விஜயா
20-11-80 THE WILBY CONSPIRACY

## நான்குபேர் தெரிவு

(அரியாலை)

அகில இலங்கை உதைபந்தாட்ட பத்தொன்பது வயதுக்குட்பட்டோருக்கான கோஷ்டிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வன் மாணிக்கத்தம்பி ரொபேட்டும் குருநகர் பாடும் மீன்விளையாட்டுக்கழககத்தைச் சேர்ந்த செல்வன் அந்தனிதாஸ் ஜெயந்தன். யாழ் வைக்கின்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த செல்வன்கள் மாட்டீன் எஸ். அருளானந்தம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்ட நான்கு வீரருமாவார்.

இவர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் நடைபெறவிருக்கிறது. இவர்களுக்கு ஏற்படும் செலவில் ஒருபகுதியைக் கொடுக்க யாழ். உதைபந்தாட்ட லீக் காரிய நிர்வாகசபை முடிவு செய்திருக்கிறது. (அ)

## ஸ்கந்தா வெற்றி

(பலாலி)

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால்நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 2ம் பிரிவில் யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் கல்லூரியை, கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 5—1 என்ற கோல்களால் தோற்கடித்தது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஏ. கமலநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ஹரன் யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKEY AND THE BANDIT
action-comedy-color

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
சிவாஜி-கே. ஆர். விஜயா
கிரகப் பிரவேசம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)

மட்டுவில்

## விளையாட்டு விழா போட்டி முடிவுகள்

(அரியாலை)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற விளையாட்டுவிழாவில் பெண்களுக்கென நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டப்போட்டியில் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்தது.

ஆண்களுக்கென நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப்போட்டியில் புத்தூர் விக்கினேஸ்வரா கிழப்பிரிவு உதைபந்தாட்ட கோஷ்டி மட்டுவில் மகாவித்தியாலய மூன்றும் பிரிவு உதைபந்தாட்ட கோஷ்டியை 2;1 கோல்களால் வெற்றிபெற்றது. பலாலிஆசிரியர்பயிற்சிக்கலாசாலை உதைபந்தாட்டக்கோஷ்டி புத்தூர் விக்கினேஸ்வர உதைபந்தாட்டக்கோஷ்டியுடன் மோதி 2:2 கோல்களால் சமனுகிக் கொண்டது.

மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக் கோஷ்டியுடன் நடாத்திய புதியமுறை 'செற்அப்' கரப்பந்தாட்டப் போட்டியில் மோகனதாஸ் கோஷ்டி 2;1 புள்ளிகளால் வெற்றியீட்டியது. அன்று மாலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வெற்றிபெற்ற கோஷ்டிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (அ)

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 2-ந் திகதி

திங்கட்கிழமை

(17-11-80)

மேடம்: எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டி விஷமிகளின் புனைந்துரைகள் உங்களுக்கு வேதனையைத் தரலாம்.

இடபம்: கனிவான நினைவலைகளில் இன்று மிதந்து செல்லுவீர்கள் வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவையும் பெறுவர் தாய் வழியால் சுகமும் உண்டு.

மிதுனம்: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள். அபிப்பிராய பேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். குடும்பத்தில் அமைதிநிலவும்.

கடகம்: தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும் எதிர்பாராதவிபத்திற்கும் இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

சிங்கம்: புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும் காதலில் ஈடுபட்டவர்களுக்கு இன்று கனருஷியான நாள்.

கன்னி; தொழில் துறையில் எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு, புதிய முதலீட்டை ஒத்திவைக்கவும். நண்பர்களால் மனக்கவலை உண்டாகலாம். மனத்திடம் நன்று.

துலாம்; மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் சகதொழிலாலார்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள் முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: கடன்தொல்லை கட்டுப்படியாகும். தொழில் துறையில் வருவாய் அதிகரிக்கும். வீட்டிலும் வேற்றுமைகள் மறையும். பிரயாண சுகமும் உண்டு.

தனுசு: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். மக்களால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு சகோதர வழியால் நன்மைகள் வந்து சேரும்.

மகரம்: ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு வேதனையைத் தரலாம் குடும்பத்தில் சிறிய பூசல்கள் தோன்றும் தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கும்பம்: ஆசை அலைகள் மோதும் வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலைதென்படும். ஆணவப் போக்கினால் பிறருடைய பகையைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டாம்.

மீனம்: குடும்ப நலனில் புதிய உற்சாகம் பிறக்கும் உறவு முறையில் அபிவிருத்தி காணப்படும் வசீகரப்பேச்சு வெற்றியைத் தேடித்தரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை



பாடசாலைகளுக்கான அகில இலங்கை நடனப் போட்டியில் இவ்வருடம் மேற்பிரிவு புதிய ஆக்கம் தனி நடனத்தில் 1-ம் இடத்தை செல்வி பாலறஞ்சினி பாலசுப்பிரமணியம் பெற்றுக் கொண்டார். இவர் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவியும், அக்கல்லூரி நடன ஆசிரியையும், ஸ்ரீ சண்முகானந்த பரதநாட்டியப்பள்ளி அதிபருமான 'நாட்டிய விசாரதா' செல்வி அன்னபூரணி முத்துக்குமாரனின் சிஷ்யையுமாவார்.

## கைது!

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு நேரத்தில் சட்ட விரோதமான முறையில்கசிப்பு தயாரித்துக்கொண்டிருந்தநபர் ஒருவரை சங்கானைப் பொலிசார் கைது செய்ததுடன், 480 டிரும் கோடா, 48 டிரும் கசிப்பு ஆகியவற்றையும் கைப்பற்றினர்கள். இரகசியத்தகவல் ஒன்றையடுத்து பண்டத்தரிப்பு செபமாலைமாதாகோவிலடியிலுள்ள வீடு ஒன்றில் நள்ளிரவு 12 மணியளவில் திடீர்ப் பிரவேசம் செய்த பொலிஸ் நிலைய சப்இன்ஸ்பெக்டர் திரு. சார்லி குணசேன தலைமையிலான பொலிஸ்கோஷ்டி அங்கு கசிப்புக் காய்ச்சிக்கொண்டிருப்பதை கையும் மெய்யுமாகக் கண்டுபிடித்தனர். இச்சம்பவம் தொடர்பாக முத்துகுணசீலன் என்பவரைப் பொலிசார்கைது செய்ததுடன், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பாவிக்கப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றினர்கள். (அ)

## வயோதிபர் தாக்கப்பட்டாராம்

(நெல்லியடி)

பனையோலை வெட்டுவதற்கு கூலியாளுடன் சென்ற வயோதிபரொருவர் இரும்புக் கம்பியால தாக்கப்பட்டுள்ளார். தலையில் ஏற்பட்ட பலத்த காயத்துடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அல்வாய் மேற்கைச் சேர்ந்த கந்தையா கதிர்காமத்தம்பி (வயது 73 வயோதிபரே இவ்வாறு தாக்குண்டவராவார். இவரைத்தாக்கியதாகக் கூறப்படும் சின்னராசா என்பவரை இம்மாதம் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பந்தமாக புலன்விசாரணைகளை, பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தினைச்சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. கே. செல்லிபுரம் மேற்கொண்டிருந்தார்.

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி வலம்வருவதற்கு
ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!
மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் ✯ சீமா ✯ புன்னகை அரசி கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி பத்மினி ✯ வி. கே. ராமசாமி ✯ மனோரமா
விதுபாலா ✯ ரீனு ✯ அமெரிக்க நடிகர்கள் ஜோ ஆலபரட் ✯ மார்ஷல்
மற்றும் பலர் ஜொலிக்கும்
ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப் படங்களை மிஞ்சும்வகையில் அமைந்த விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப் படத்திலும் காணக்கிடைக்காத பயங்கரச் சண்டைகள், மோட்டார் சைக்கிள், கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கான
ஆங்கிலப் பயிற்சி

Seat Work in English-7 Rs. 7-75
NEW METHOD
Seat Work in English-5 Rs. 5-00
Seat Work in English-4 Rs. 3-25
Seat Work in English-3 Rs. 2-50

காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## “சம்பளத்தை முதலாளிமார் குறைத்துவருகிறுர்கள்”

(யாழ்ப்பாணம்)
இலங்கை சுருட்டுத் தொழிளாளர் சங்கம் 79ம் ஆண்டு போராடிப்பெற்ற 50 ரூபாவை முதலாளிமார் நாளாந்தம் குறைத்துக் கொண்டே வருகிறுர்கள். இது தொழிலாளரின் ஒற்றுமைக்குறைவேயாகும்.

தாவடியில் நடந்த சுருட்டுத் தொழிலாளர் கூட்டத்திற் தலைமைதாங்கிப் பேசிய சங்கத் தலைவர் திரு. இ. பொ. வ. மா. க. முதலியார் கூறினர்.

திரு. முதலியார் மேலும் கூறியதாவது: முதலாளிமார்கள் புகையிலை விலை ஏற்றம் காரணமாக தொழிற்சங்களை நாடி கூலியை உயர்த்தும்படி வற்புறுத்திக்கொண்டு இருக்கின்றனர். வடமாகாணத்தில் சட்டமாக்கிய 50 ரூபா கூலியை கொடுக்காத முதலாளிமார்கள் எப்படி தொழிற் சங்கம் கூட்டும் கூலியை கொடுப்பார்கள், சட்டப்படி 50 ரூபாய் கூலியில் அரசாங்கம் வரவுசெலவுத்திட்டத்தில் 100 ரூபாய் கூட்டினல் சுருட்டுத் தொழிலாளருக்கு1000 சுருட்டுகளுக்கு வேதனமாக ரூபாய் 70 வழங்க வேண்டி நேரிடும். இதை முதலாளிமார்கள் சற்று உணரவேண்டும்.

திருவாளர்கள் க. தங்கராசா, செ. தம்பிராசா, க. விசுவலிங்கம் உட்பட பலர் பேசினர். (க)

## நகரசபை உறுப்பினர் காலமானுர்

(யாழ்ப்பாணம்)
வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் திரு. சி. தவபுத்திரன் காலமானுர். இவர் சடந்த சில நாட்களாக இருதய நோயினுல் பாதிக்கப்பட்டிருந்தார்.

## ரயில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
யத்துடன் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியாதவது;-

“மேற்படி வீதியால் தினமும் கூடுதலான வாகனங்கள் செல்லுகின்றன. அப்படிப்பட்ட வீதியில் இருக்கும் ரயில்வே கடவையில் ஒரு பாதுகாப்புக் கதவு இல்லாதது வேதனைக்குரியது “இக் கடவையில் பாதுகாப்புக் கதவு இல்லாதால் முன்பும் பல விபத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. பாதுகாப்புக் கதவு இருந்திருந்தால் மேற்படி சாரதி அநியாயமாக இறந்திருக்கமாட்டார். இனிமேலாவது ரயில்வேத் திணைக்களம் இவ்விடயத்தில் கூடுதலான அக்கரைகாட்டி அவ்விடத்தில் கதவு ஒன்றை அமைக்க ஆவன செய்யவேண்டும்”,

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சரவணபவன் பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். (கொ-உ)

# அம்பன் கொள்ளை: நால்வர் கைது!

(புலோலி)
பருத்தித்துறை அம்பனில் நகைகளும், ரொக்கப் பணமும் உட்பட 58,600 ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி கன்பொல்லையைச் சேர்ந்த சுந்தரம் தேவசகாயம், குடத்தனையைச் சேர்ந்த கார்ச்சாரதி ஆழ்வான் சுந்தசாமி, அலிசாவலையைச் சேர்ந்த மதுன்ரவீரன் நந்தகுமார், கல்வியங்காட்டைச் சேர்ந்த நவரத்தினம் நகுலேஸ்வரன் ஆகிய நான்கு சந்தேக நபர்களுமே இத்துணிகரக் கொள்ளை சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சந்திராபெரேரா தலைமையிலான பொலிஸ் கோஷ்டியிடம் அகப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக காரொன்றையும், உருக்கப்பட்ட நிலையில் கொள்ளையடிக்கப்பட்ட தங்க நகைகளில் ஒரு பகுதியையும் பொலிசார் மீட்டுள்ளனர்,

இதனையடுத்து யாழ் பொலிசார் இச்சந்தேகநபர்கள் நால்வரையும் பருத்தித்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தன பருத்தித்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஜனுப் குறூப் இச்சந்தேக நபர்கள் நால்வரையும் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்தபோது நீதவான் சந்தேகநபர்களை இம்மாதம் 12ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இத்துணிகரத் திருட்டு தொடர்பாக இன்னும் நால்வரைத் தேடி பொலிசார் வலை வீசியுள்ளனர்.

## கப்புதூவுக்கு அரச அதிபர் விஜயம் செய்வார்

(உடுப்பிட்டி)
யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி எதிர்வரும் 19ம் திகதி கப்புதூ கிராமத்திற்கு முதற்தடவையாக விஜயம் செய்யவுள்ளார்.

இங்கு விஜயம் செய்யும் அரசாங்க அதிபர் கப்புதூவிலுள்ள கிராமிய குடும்பநல மாதர் மன்றத்தையும் பாலர் பாடசாலையையும் அங்குரார்ப்பணஞ்செய்து வைப்பார். இதனைத் தொடர்ந்து இப்பகுதி மக்களால் கல்புதூ சைவத் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடத்தப்படும் வரவேற்பு விழாவிலும் அவர் கலந்து கொள்வார். (அ)

## வீட்டுக்காரரைக் கட்டிவைத்து நகைகள் கொள்ளை!

### மல்விலில் சம்பவம்

(பச்சிலைப்பள்ளி)
பளைப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மல்வில் என்னுமிடத்தில் இரவு நேரத்தில் வீட்டை உடைத்துப் பலவந்தமாக உட்புகுந்த கொள்ளையர்கள் வீட்டிற்குள் இருந்த நம்பிகளையும் அவர்களது உறவினரையும் தாக்கிய பின்னர் அவர்களது கைகால்களைக் கட்டி வாய்க்குள் துணியை அடைத்து விட்டுத் தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மல்விலைச் சேர்ந்த நாராயணன் ஜெயராமன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது கொள்ளைக் கோஷ்டியினர் ஜெயராமனையும் அவரது மனைவி செல்வராணியையும், அவர்களது பெருமகன் முறையான வீமன் நடராசா என்பவரையும் தாக்கி கைகால்களைக் கட்டிப்போட்டு வாய்க்குள் துணியைத் திணித்து விட்டுக் கொள்ளையர்கள் முப்பத்தாறுயிரம் ரூபாபெறுமதியானதங்கநகைகளைக்கொள்ளையடித்துச் சென்றதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளை தொடர்பாகப் பளைப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. சி. விஜயசூரியா தலைமையில் கன்ஸ்டபிள்கள்த. அருச்சுனன் கந்தையா முல்லேகம சாஜன்ட் பிரேமரத்ன ஆகியோரைக் கொண்ட பொலிஸ் கோஷ்டி சந்தேகநபர்களைத் தேடி வலைவிரித்துள்ளது. (அ)

## பொலிசார்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
களின் கத்திகளையும் லாவகமாக பறித்துவிட்டாராம். அடுத்து 3வது கொள்ளையன் கத்தியுடன் வந்து கங்காதேவியை மடக்கி குப்புற எழும்பவிடாது பயமுறுத்திக் கொண்டிருந்தான். மற்றைய மூவரும் வீட்டை நாசப்படுத்தி 300 ரூபா ரொக்கப்பணம், 12 பவுண் தாலிக்கொடி, இருசோடி காப்பு, ஒரு மோதிரம், துவக்கு, 5 தோட்டாக்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துக்கொண்டு சென்றுள்ளனராம்.

கொள்ளைக்காரர் 6 பேரும் 25க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதுள்ளவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. அறுவரும் கிறிஸ்கத்தியே வைத்திருந்தனராம். இவர்கள் கொள்ளை அடித்துவிட்டு வெளியில் வந்ததும் தவசிங்கத்துக்குச் சொந்தமான ட்ராக்டரை இயங்காமல் செய்து விட்டுச் சென்றனராம்.

இதுசம்பந்தமாக வவனியா உதவிப்பொலிஸ் அதிபர் ஸ்ரான்லி ரணசிங்கா தலைமையில் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. குணசேகரா புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்

நீண்ட நாட்களுக்குப்பின்பு இச் சம்பவம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (ச)

## பங்கீட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வதற்கான நடவடிக்கைகளை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும், கச்சேரிகளும் மேற்கொண்டு வருகின்றன.

1981, 82 ம் ஆண்டுகளுக்கான வாகன உத்தரவுப்பத்திரங்களைச் சமர்ப்பித்து பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம். (கு)

## சபையில்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)
றேடியோக்கள் எல்லாம் இன்று சாதாரண வீட்டுப் பொருள்கள், வீடுகளின் காட்சி அலுமாரிகள் எல்லாம் இன்று நிறைந்து காட்சிதருகின்றன.

0 0 0

(கொழும்பு தெற்கு உறுப்பினர் அனுரா பஸ்ரியன் குறுக்கிடுகிறுர்)

சபாநாயகர்: உறுப்பினர் குறுக்கிடவேண்டாம்; அமைதியாக இருங்கள்.

ஹலீம் இஸாக்: அவர் சாதாரண உறுப்பினரல்ல சபாநாயகர் அவர்களே; ஜனதிபதியின் வெற்றிடத்தை நிரப்ப வந்தவர்.

ஹலீம் இஸாக்: பஸ் கட்டண உயர்வால் பிள்ளைகள் கல்வியையே நிறுத்தவேண்டி ஏற்பட்டுள்ளது. (ம-கு)

## பிரிட்டிஷ் இளவரசரின் இந்திய விஜயம்

புதுடில்லி, நவ. 16
பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இம்மாதம் 24-ந் திகதி இந்தியா வருகிறுர்.

இந்தியாவில் இளவரசர் 14 நாட்கள் தங்கியிருப்பார்.

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை லிமிட்டெட்)

✶ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
✶ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
✶ சுற்றுலாக்கள் ✶ பாஸ்போர்ட்

உங்களது பிரயாண வசதிகளை
நீங்கள் கொழும்பு செல்லாமலே
நாங்கள் ஒழுங்கு செய்கின்றோம்!
யாழ்ப்பாணம் — கொழும்பு
விமானப் பயணத்துக்கும் எம்மை நாடுங்கள்
MACKINNON TRAVEL SERVICE (CEYLON) LTD.
யாழ். கிளை
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்.
8, பருத்தித்துறை வீதி — யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92, தொலைபேசி; 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

14—11—80 அன்று நடந்த நாகம்ஸ் டெக்ஸ்டைல் பரிசுத் திட்டத்தில் ரூ. 1500/- பரிசு பெறும் அதிஷ்டசாலியின் பெயர்

நவரத்தினம் நவநிதா
சுண்ணுகம் கிழக்கு
சுண்ணுகம்.

அதிஷ்ட இலக்கம்
No. 12044
அதிஸ்டசாலி நாகம்ஸ் முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
7375

## மரண அறிவித்தல்

### திருமதி சிங்கராயர் றேசைமுத்து

சுன்னுகத்தை சேர்ந்த றேசா வாசா திருமதி சிங்கராயர் றேசைமுத்து காலமானுர் இவர் காலம் சென்ற சிங்கராயரின் அருமை மனைவியும், கிறிஸ்தோஸ்தோம், குணதாசன், வரப்பிரகாசம் (S.D.W. கச்சேரி, மட்டக்களப்பு), நட்சேஸ்திரம், மேரி கிறிஸ்ரின், தர்மராஜா (S. D. W. கச்சேரி, அம்பாறை), மேரி அஞ்சலின், எஸ். எம். போல் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை, அம்பாறை), ஆகியோரின் தாயாரும், அமிர்தநாதர், அம்புறேஸ், அல்பிரட், அருட்பிரகாசம் (ஆசிரியர், அருணேதயாக் கல்லூரி, அளவெட்டி), அருளப்பு (பட்டினசபை, சுன்னுகம்), வின்சென்ற் (ரி. ஏ., கல்கமுவ), ஞானலங்காரம், எலிசபெத், றபேக்கா, மேரி மக்டலின், வேதநாயகம் (சணகாளர், மரக்கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), ஜேக்கப் ஆகியோரின் மாமியாரும், சௌந்தரராஜன் (புடவைக் கைத்தொழில் இலாகா, அக்கரைப்பற்று) ஆகியோரின் பேத்தியாரும், டாக்டர் ஜி. ஜோர்ஜ், டாக்டர் ஜி. எட்வேட், திருமதி அமலோற்பவம் அருளானந்தம், திருமதி லில்லிறேஸ் பாவிலுப்பிள்ளை ஆகியோரின் சிறிய தாயாருமாவர்.

அன்னுரின் பூதவுடல் சுன்னுகம் சுப்பிரமணியம் வீதியிலுள்ள 'சிங்கராய பவன'த்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் சேமக்காலைக்கு இன்று (17-11-80) பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.
7376

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at General Post Office Sri Lanka under No. QM 8948/78 The Eelanaadu P. B. No 41. Telegrams Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org